இந்த வழக்கு 25-5-92இல் ஏற்பட்டு 27-10-92இல் விவாதிப்பதாக இருந்தது என்றும், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மனுதாரர் தரப்பு சட்டத்தரணி ரவிச்சந்திரன் மீது தாம் வழக்குத் தொடுக்கவில்லை என்று சட்டமா அதிபர் சிபார்சு செய்து ஒரு மாதம் ஆகிறது என்றும், ஆயினும் மனுவில் கூறப்பட்டவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும் அதற்கு உத்தரவிடவேண்டும் என்றும் நீதியரசரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையை அரச சட்டவாதி ஆட்சேபிக்கவில்லை. அவரும் இதற்கான உத்தரவைப் பிறப்பிக்கும்படி கோரினார். அப்போதே நீதியரசர் இஸ்மாயில் மேற்கண்ட கூற்றை வெளியிட்டார்.

14-12-91இல் மட்டக்குளியில் வைத்து எனது மகன் கைதானார். அவர் பாதுகாப்புச் சேவை ஒன்றில் வேலை பார்த்து வந்தவர். தற்போது அவர் தடுப்புக்காவல் உத்தரவின்பேரில் மகஸின் சிறைச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரை விடுதலை செய்ய வேண்டும் என மனுதார் மனுவில் கேட்டிருந்தார்.

14-12-91இல் சி. ஐ. டி. அலுவலகத்தில் ரவிச்சந்திரனைத் தடுத்து வைக்கும் மூன்றுமாத தடுப்புக்காவல் உத்தரவை அவசரகால விதிகளின்கீழ் 19 (1) பிரிவின்கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மெண்டிஸ் பிறப்பித்திருந்தார்.

12-3-92இல் அவசரகால விதிகளின் 9 (1) பிரிவின்கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி டி பி. விஜயதுங்கா தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த உத்தரவின் கீழேயே ரவிச்சந்திரன் மகஸின் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றார் இந்த உத்தரவு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட்டு பதினெட்டு மாதங்கள்வரை நீடிக்கப்படக் கூடியதாகும்

மன்றின் பதிவேட்டுப் பிரதியைப் பெற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கையை வற்புறுத்தும்படி மனுதார் தரப்பு சட்டத்தரணியை நீதியரசர் பணித்தார். வழக்கு அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது,

## வன்னிப் பிரதேசத்தில் ஏற்புத் தடுப்பூசி தட்டுப்பாடு

(வவுனியா)

வன்னிப்பகுதி அனைத்து வைத்தியசாலைகளிலும் ஏற்புத் தடுப்பூசிக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது.

வவுனியாபிரதேச வைத்திய சாலைகளிலோ கிளிநொச்சி, முல்லைத்தீவு வைத்தியசாலைகளிலோ இந்தத் தடுப்பூசி அறவே இல்லை என்று குறிப்பிட்ட வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதானமான இந்த ஏற்புத் தடுப்பூசி இல்லாத காரணத்தினால் வன்னிப் பகுதியில் உள்ள நோயாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். பலர் அநியாய மரணங்களைத் தழுவ வேண்டிய நிலையில் உள்ளனர். (தி)

## மனித உரிமைக்குழு பிரதிநிதி கொழும்பு விஜயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் தூதுக் குழுவினருக்கு விரிவான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மாலைதீவில் தமது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு வந்துள்ள சர்வதேச மன்னிப்பு சபையின் இருபிரதிநிதிகள்நவம்பர்2-ம் திகதிமுதல்5-ம் திகதி வரை மட்டக்களப்பில் தங்கியிருக்கவுள்ளனர்.

இத்தூதுக் குழுவினர்மட்டக்களப்பு - திருமலை ஆயர் மற்றும் மனித உரிமை பேணுதலில் அக்கறையுடையோர்

தொழில் துறையில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியும் கண்டறியவுள்ளனர் அத்துடன் மலையகப் பகுதியில் அண்மைக் கால கைதுகள், மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது உட்படப் பல விடயங்கள் குறித்தும் ஆய்வு செய்யவுள்ளனர்.

## திருட்டு

(மானிப்பாய்)

நவாலியில் நேற்று முந்தினம் இரவு வேளையில் பாங்கர் தவநாயகம் என்பவரது வீட்டில் நின்ற ஒரு மோட்டார் சைக்கிளையும், ஒரு சைக்கிளையும் கள்வர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

சம்பவ தினத்தன்று பெரு

இச்சீர்திருத்தம் தொடர்பான கருத்துக்கணிப்பு தோல்வியில் முடிவுற்றமை உலகில் பலருக்கும் அதிர்ச்சி அளிக்கும் ஒன்றாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை. ஏனெனில் இச்சீர்திருத்தத்திற்கு கனடாவில் உள்ள சமஷ்டி அமைப்பின் பிரதமர், கியூபெக் மாகாணத்தின் பிரதமர் உட்பட சகல மாகாணங்களின் பிரதமர்களும். பிராந்திய மாகாண அமைச்சர்களும் நான்கு தேசிய பழங்குடி அமைப்பின் பிரதிநிதிகளும் ஏகமனதாக ஆதரவைத் தெரிவித்திருந்தனர். அநேக மாகாண எதிர்க்கட்சிகளின் ஆதரவும் இச்சீர்திருத்தத்திற்கு கிடைத்திருந்தது.

இச்சீர்திருத்தம் குறித்து ''முன் எப்பொழுதும் இல்லாத அளவில் கியூபெக் மாகாணம் பலாபலன்களைப் பெற்றுள்ளது. கனடாவைப் பலப்படுத்தும் 'நீதியான- கௌரவமான இணக்கப்பாடு' ஒன்றிற்கு நாம் வந்துள்ளோம்." எனக் கனேடிய பிரதமர் பிரையன்மல்ரோனி தெரிவித்தார்.

''பேச்சுவார்த்தைகளின் விளைவுகள் குறித்து மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன். இருவருட கால நிச்சயமற்ற தன்மையின்பின் உறுதிப்பாட்டை நோக்கி கனடா சென்றுகொண்டிருக்கின்றது. அமைதியிலும் சுபீட்சத்திலும் நம்பிக்கை கொண்ட கியூபெக் மக்கள் இதில் மகிழ்ச்சி அடைவார்கள்.'' இவ்வாறு சீர்திருத்தம் குறித்து கியூபெக் மாகாண பிரதம மந்திரி தெரிவித்தார்.

இதேவேளை கனடாவில் மேற்கொள்ளப்பட இருந்த இச்சீர்திருத்தம் குறித்து உலகின் எதிர்பார்க்கையும் பெரிதாகவே இருந்தது. இவ்வாக்கெடுப்பிற்கு ஆதரவான முடிவு கிடைத்திருக்குமானால், சிறுபான்மையினர் பிரச்சினைகளை சிறந்த முறையில் தீர்த்து வைத்த நாடாக கனடா விளங்கும் எனவும் பலரால் எதிர்பார்க்கப்பட்டது. இதன் மூலம் ''உலகின் மிகவெற்றிகரமான நாடு'' என்ற அந்தஸ்து கனடாவிற்கு கிடைக்கும் எனவும் கூறப்பட்டது.

இவ்வாறாகப் பெரியளவில் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்கத்தில் குறிப்பிடும்படியான அதிகாரப் பரவலாக்கல் கியூபெக்கிற்குக் கிடைக்க வாய்ப்பும் இருந்தது என்பதற்கும் மறுப்பதற்கில்லை 'இச்சீர்திருத்தத்தின்படி சமஷ்டி அரசிடம் - மத்திய அரசாங்கம் - இருந்த அதிகாரங்கள் பல மாகாண அரசுகளிற்திற்கு மாற்றப்பட்டிருந்தன. அத்தோடு சில விடயங்களில் கியூபெக் மாகாணத்திற்கு சமஷ்டி அரசில்'வீட்டோ' அதிகாரமும்வழங்கப்பட்டிருந்தது. அதாவது இதன் மூலம் 'கியூபெக் சமுதாயத்தின் தனித்துவம், முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றே கூறலாம்.

இவ்வாறாக கியூபெக் மாகாணத்தின் தனித்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையிலும், கியூபெக் மக்கள் கனடா என்ற அமைப்பினுள் இணைந்திருக்க விரும்பவில்லை என்பதையே கருத்துக் கணிப்பின் முடிவு தெரிவிக்கின்றது. தமது தனித்துவத்தை முழுமையாகப் பேணக்கூடியதும் தமக்கு பூரண பாதுகாப்பு அளிக்கும் எனக் கருதும் தனி அரசு ஒன்றை அமைப்பதையே கியூபெக் மக்கள் விரும்புவதாக தெரிகின்றது அதாவது இக் கருத்துக் கணிப்பானது உலகிலுள்ள சிறுபான்மை தேசிய இனங்களின் பாதுகாப்பிற்கு தனியரசு ஒன்றே சிறந்தது என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளது என்றே கூறலாம்.

இலங்கை ரூபவாகினியின் கூட்டுத்தாபன பதில் பணிப்பாளர் திரு எச் பொரலேஸ்ஸ கடந்த 16 ஆம் திகதியில் இருந்து கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார் என பணிப்பாளர் ஜெனரல் திஸ்ச காரிய

... தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், விசாரணை முடிவுற்றதும் இவரது கட்டாய லீவு தொடர்பாக பரிசீலனை செய்யப்படும் என தெரிவித்தார்.

... சந்திரன் மீது தாம் வழக்குத் தொடுக்கவில்லை என்று சட்டமா அதிபர் சிபார்சு செய்து ஒரு மாதம் ஆகிறது என்றும், ஆயினும் மனுவில் கூறப்பட்டவர் இன்னமும் விடுவிக்கப்பட

# ஜே. வி. பியில் எஞ்சியுள்ள சிலர் வன்செயலைத் தூண்ட முயற்சி

## - மகியங்கனையில் பிரேமதாசா

ஜே. வி. பியில் எஞ்சியுள்ள சிலர் நாட்டில் மீண்டும் வன்செயல்களைத் தூண்டிவிடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். இவர்கள் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதற்காக காடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதுடன் ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏறபடுத்துவதற்கும் முயன்று வருகின்றனர்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மஹியங்கனையில்ஆடைத்தொழிற்சாலையொன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஜே. வி பியினர் தாம் பயிற்சியளிக்கும் இளைஞர்களுக்கு துப்பாக்கிகளை வழங்கி வருகின்றனர். அவர்களில் சிலர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இளைஞர்களை ஜே. வி. பி. யினர் சேர்த்துக்கொள்வதற்கு முன் நான் அந்த இளைஞர்களை ஆடைத் தொழிற்சாலையில் சேர்த்துக்கொள்ள உள்ளேன் எனத் தெரிவித்தார்.

மேலும் இளைஞர்களின் எழுச்சியை ஆயுதங்களைக் கொண்டு அடக்கிவிட முடியாது எனத் தெரிவித்த அவர், பொருளாதார வளர்ச்சி மூலமாகவும் நாட்டைச் செழுமைப்படுத்துவதன் மூலமாகவுமே அதனைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவித்தார்.

## கொழும்பு விஜயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் தூதுக் குழுவினருக்கு விரிவான முறையில் எடுத்துரைக்கப்படவுள்ளது.

மாலைதீவில் தமது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு வந்துள்ள சர்வதேச மன்னிப்பு சபையின் இருபிரதிநிதிகள் நவம்பர் 2-ம் திகதிமுதல் 5-ம் திகதி வரை மட்டக்களப்பில் தங்கியிருக்கவுள்ளனர்.

இத்தூதுக் குழுவினர்மட்டக்களப்பு - திருமலை ஆயர் மற்றும் மனித உரிமை பேணுதலில் அக்கறையுடையோர் அனைவரையும்சந்தித்துப் பேசவுள்ளனர்.

மலையகப் பகுதிக்கு விஜயம் செய்யவிருக்கும் இத் தூதுக்குழுவினர்பெருந்தோட்டத் தொழில் துறையில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியும் கண்டறியவுள்ளனர் அத்துடன் மலையகப் பகுதியில் அண்மைக் கால கைதுகள், மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது உட்படப் பல விடயங்கள் குறித்தும் ஆய்வு செய்யவுள்ளனர்.

## திருட்டு

(மானிப்பாய்)

நவாலியில் நேற்று முந்தினம் இரவு வேளையில் பாங்கர் தவநாயகம் என்பவரது வீட்டில் நின்ற ஒரு மோட்டார் சைக்கிளையும், ஒரு சைக்கிளையும் கள்வர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

சம்பவ தினத்தன்று பெருமழை பெய்து கொண்டிருந்ததினால் கள்வர்கள் தமது கைவரிசையை இலகுவாக முடித்துக்கொண்டு வெளியேறிவிட்டார்கள்.

# பொஸ்னிய நெருக்கடிக்கு தீர்வு; புதிய அரசு அறிமுகம்

(ஜெனீவா)

பொஸ்னியா நெருக்கடியைத் தீர்ப்பதற்கு புதிய முறையிலான அரசாங்கம் அறிமுகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான ஆலோசனையொன்றை சர்வதேச மத்தியஸ்தர்கள் முன் வைத்திருக்கின்றனர். மத்தியஅரசாங்கத்துடன் இணைந்த இந்த புதிய ஆட்சிமுறைக்கேற்ப பிராந்திய நிர்வாகத்துக்கு அதிக அதிகாரம் கிடைக்கும் இனக்குழுக்களும் சேர்த்துக் கொள்ளப்படும்.

மத்தியஸ்தர்களான சைரஸ் வான்ஸ், ஒவன்பிரபு ஆகியோரால் உத்தேச ஆலோசனை முன் வைக்கப்பட்டது. ஜெனீவாவில் நடைபெற்ற இரகசிய மாநாடொன்றின் போது அங்கு குழுமியிருந்த ராஜதந்திரிகள் முன்னிலையில் அவர்கள் இருவரும் தமது ஆலோசனையைத் தெரிவித்தனர்.

இவ்வாறு புதிய முறையிலான ஆட்சி முறை போதியளவு சுயாட்சியினை இனக்குழுக்கள் அடைய வழி கோலும் எனத்தெரிவிக்கப்படுகிறது. பொஸ்னியாவின் கடந்த ஏழுமாத கால நெருக்கடிக்கு வான்ஸ் ஓவன் ஆகியோர் முன் வைத்துள்ள ஆலோசனை மூலம் சிறந்த பலன் ஏற்படுமெனக் கருதப்படுகிறது.

நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் ஒருபடி முன்னேற்றம் இந்த ஆலோசனைகள் மூலம் கிடைத்திருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் ஐரோப்பாவில் மிகப்பெரிய அகதிகள் நெருக்கடி ஒன்றும் உருவாகியிருப்பதாக மத்தியஸ்தர்கள் கூறினர். சேர்பிய கிளர்ச்சியாளர்கள் சொந்தமாக பொஸ்னிய மாநிலமொன்றை உருவாக்க விடுத்த வலியுறுத்தலை மத்தியஸ்தர்கள் அங்கீகரிக்க மறுத்து விட்டனர்.

மாநாட்டில் 13 நாடுகள் கலந்துகொண்டன. இந்தநாடுகள் மத்தியஸ்தர்களின் ஆலோசனையை வரவேற்றன. குழுமியிருந்த இஸ்லாமிய மாநாட்டு பிரதிநிதிகள் ஆலோசனையை கண்டிக்கலாயினர்.

ஐரோப்பிய சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகளாக இயங்கிய சைரஸ்வான்சும், ஒவனும் ஐ. நா. சபையினாலேயே நியமிக்கப்பட்டனர்.

எழுபது சதவீதத்தைக் கைப்பற்றியுள்ள சேர்பிய கிளர்ச்சியாளர்கள் பலத்த எதிர்ப்பினை இது விடயத்தில் காட்டக் கூடுமென மத்தியஸ்தர்கள் கருதுகின்றனர். எனினும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு அதிகளவில் இருப்பதால் சேர்பிய கிளர்ச்சியாளரின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சவேண்டியேற்படாதென அவர்கள் கருதுகின்றனர்.

சரஜேவோவில் பொஸ்னிய அரசாங்கத்திற்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் சேர்பியர்கள் கிளர்ந்தெழுந்தனர். குடியரசின்பாராளுமன்றத்தில் முஸ்லிம், குரோஷிய அமைச்சர்கள் பழைய யூகோஸ்லாவியாவிடமிருந்து சுதந்திரம் கோரிவாக்களித்ததை அடுத்து பிரச்சினை உருவாகியது.

## ''தடா'' செல்லுபடியாகாது வீரமணி வழக்குத் தாக்கல்

(சென்னை)

'தடா' சட்டம் சட்ட ரீதியாக செல்லுபடியாகுமா என்பது குறித்து திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கே. வீரமணி தாக்கல் செய்துள்ள ரிட்மனுவை கடந்த புதன் சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டது.

கிரிமினல் சட்டத்துறை கோட்பாட்டின் அடிப்படைக் கொள்ளைகளை இந்த சட்டம் மீறுகின்றது, என்று வீரமணி வாதாடினார். நீதிபதி எம். சிறீநிவாசன் இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டு மத்திய உள்துறை செயலாளருக்கும் தமிழக அரசின் உள்துறை செயலாளருக்கும் நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார்.

## எதிர்ப்பாளர்களை அடக்க ரஷ்ய அதிபர் திட்டம்?

(மொஸ்கோ)

தேசிய இரட்சிப்பு முன்னணி என்ற பெயரில் அதிபர் யெல்சினைப் பதவி விலகக் கோரும் அமைப்புக்கு தடை விதிப்பது பற்றி ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் ஆலோசித்து வருகின்றார். இவ் அமைப்பு அதிபர் யெல்ட்சின் சட்டத்திற்குப் புறம்பான வகையில் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டி வருவது தெரிந்ததே.

இம் முன்னணி முன்னாள் கம்யூனிஸ்ட்டுகள் ரஷ்யத் தேசியவாதிகள், மற்றும் முன்னாள் இராணுவத்தினரின் கூட்டில் உருவானது என்றும், நாட்டிற்கு அச்சுறுத்தலாக மாறி இருக்கிறது என்றும் அதிபர் யெல்ட்சின் கூறியிருப்பதாக டாஸ் நியூஸ் ஏஜன்சி தெரிவித்தது.

இதே வேளை இம் முன்னணியைத் தடை செய்வது என்பது அரசியலமைப்புக்குப் புறம்பானதென யெல்ட்சின் அரசின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## போதைப்பொருள் கடத்தலில் நச்சுப் பாம்புகள் துணை

### கொலராடோபேராசிரியர்

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் தமது பாதுகாப்புக்கருதி நச்சுப்பாம்புகளை பயன்படுத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தேவைப்படும் இடங்களுக்கும் போதைப் பொருளை இடத்திற்கு இடம் கொண்டு போகும் போதும் இவ் நச்சுப் பாம்புகளை பயன்படுத்தி வருவதாகவும் அதிகநச்சுத்தன்மை வாய்ந்த பாம்புகள் இக் கடத்தல்காரர்களிடம் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் கொலராடோ பல்கலைக் கழக பேராசிரியர் டேவிட் சிஸார் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இக் கடத்தல் காரரைமுற்றுகையிடும் போது நச்சுப்பாம்புகள் கூடுகளில் இருந்து திறந்து விடப்படுவதாகவும் பெட்டிகளில் போதைப்பொருள்கள் அடைக்கப்படும் போதும் நச்சுப்பாம்புகளும் அடைக்கப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், புடையன்பாம்பு, ஆபிரிக்க நச்சுப்பாம்பு உட்பட பல வகையான பாம்புகளை இவர்கள் பயன்படுத்தி வருவதாகவும் பேராசிரியர் டேவிட் சிஸார் தெரிவித்துள்ளார்.

## கிளார்க் குற்றச்சாட்டு

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியாளர்களுக்கு ஊக்கம் அளித்து வருவதாக தென் ஆபிரிக்க ஜனாதிபதி எவ். டபிள்யூ. ஆர். டி. கிளார்க் கூறியுள்ளார். எனினும் இந்த முயற்சிகளை முறியடிக்க பொலிசார் நடவடிக்கை எடுப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பிரச்சினைக்குத் தீர்வுகாண உண்மையான அதிகாரப்பகிர்வு

## சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையான அதிகாரப் பகிர்வொன்றின் மூலமாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என லங்கா சம சமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் மூன்றுநாள் பிரதிநிதிகள் மாநாட்டின் முடிவில் கட்சியின் பொதுச்செயலாளர் பேர்னாட் சொய்சா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கட்சியின்பிரேரணையை முன் வைத்துள்ளார்.

அவசரகாலச் சட்டம்வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற கட்சியின் கோரிக்கையை மேலும் வலியுறுத்துவதெனவும், மனிதமற்றும் ஜனநாயக உரிமைகள் மீறப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துவதெனவும் இம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாக இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நிலைமைகளையிட்டு இம் மாநாட்டில்விரிவாக்க் கவனம் செலுத்தப்பட்டதுடன் அதனுடைய சோசலிச நோக்கங்களை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நோக்கத்தை அடையும் எண்ணத்துடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒன்றிணையும் நோக்குடன்நெருக்கமாக இணைந்து செயற்டுவதெனவும் லங்கா சம சமாஜக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் புதிய மத்திய குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், கட்சியின் புதிய யாப்பும் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# சீருடை வழங்கப்பட்டது

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு ஆழியவளை ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன

'கியூடெக்' நிறுவனம் இச் சீருடைகளை வழங்கி வருகின்றது. (36)

# "குமண" திருமலை சென்றது

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பல் நேற்று மாலை திருக்கோணமலை புறப்பட்டது

இக்கப்பல் திருக்கோணமலையிலிருந்து. கொழும்பிலிருந்து யாழ் வரும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை காலை திரும்பவும் பருத்தித்துறையை வந்தடையும்.

ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலைக்கு புறப்படும்.

நேற்று மாலை புறப்பட்ட 'குமண' கப்பலில் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், மற்றும் பயணிகள் சிலரும் சென்றனர். (36)

# புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இப் புகைப்படக் கண்காட்சி இன்றுடன் நிறைவடைகிறது நூற்றுக்கணக்கானோர் இப்புகைப்படக்கண்காட்சியை சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

# கள்ளத்தோணியில் வந்த தொண்டா சக்திமிக்கவராக மாறிவிட்டார்

## - திலக்கருணாரத்னா

[கொழும்பு]

சிறிலங்காவுக்குக் கள்ளத் தோணியில் வந்த ஒருவர் கள்ளத்தோணி என்ற நிலையிலிருந்து அரசியல் ரீதியாக பலம் வாய்ந்த மனிதராக மாறியிருக்கிறார் என்று ஹெல உறுமய குழுவைச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்னா கூறியுள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். இப்பேட்டியை நோர்த் ஈஸ்ரேர்ண் ஹெரல்ட் என்ற சஞ்சிகை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது

தொண்டமானின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறலாம் என்று நினைக்கும் அரசியல் வாதிகள் ஒன்றை மறந்து விடக்கூடாது. 1977 இல் இருந்து தொண்டமானுக்குக் கொடுத்து வந்தவற்றை விட மிக முக்கியமான ஒரு கோரிக்கைக்குப் பணியவேண்டி ஏற்படும். தொண்டமான் நிறைவேற்ற வேண்டிய கருமம் இன்னும் ஒன்றுதான் உள்ளது. மலைநாட்டுத் தோட்டங்களைத் தனிப்பகுதியாக அவர் பிரகடனப் படுத்த வேண்டியதுதான் மிச்சமாக உள்ளது என்றுதிலக்கருணாரத்னா அப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மலை நாட்டுப் பெருந் தோட்டங்களில் வாழும் சிங்கள மக்கள் தொண்டமானின் தீவிரத் தன்மையால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை உருவாகியுள்ளது பரம்பரையாக மலைநாடுகளில் வாழும் சிங்களவர்போவதற்கு இடமில்லை என்றும்,

தொண்டமானைக் கண்டிப்பதுடன் எமதுசெயற்பாட்டை நாம் மட்டுப்படுத்தவில்லை தொண்டமானின் போக்கை ஆதரிப்பவர்களையும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளில் தங்கியிருப்பவர்களையும் விமர்சிக்க நாம் தயங்க மாட்டோம் தொண்டமானின் தவறுகளை வெளியில் எடுத்துச்சொல்லி தொண்டமானின் அரசியல் உறுதியை ஆட்டம் காணச் செய்யவும் போராடவுள்ளோம்

இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இனத்திற்கு ஒரு ராணுவம் தற்கொலை முயற்சியாம்

(கொழும்பு)

"இலங்கையில் வாழும் குறிப்பிட்ட இனத்துக்கு தனி இராணுவம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒரு தற்கொலை முயற்சிக்கு சமானம் ஆகும். ஏனெனில் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஒவ்வொரு இனமும் தனி இராணுவம் கேட்கத் தொடங்கினால் அக்கோரிக்கை வழங்கப்படுமோனால் அது நம்மை எங்கு கொண்டு போய் விடுமென சொல்லத் தேவையில்லை"

இவ்வாறு சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் என்ற புதிய அரசியல் கட்சித் தலைவர் ஏ. எச். சி அமீர் தெரிவித்துள்ளார்.

# ஆனையிறவுஉப்பளஊழியர் விரும்பினால் விலகலாம்

(கொழும்பு)

இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் இயங்க முடியாமல் இருக்கும் ஆனையிறவு உப்பள தொழிலாளர்கள்விரும்பினால் தமது பதவியில் இருந்து விலகிக் கொள்ளலாம். பதவி விலகுவோருக்கு கணிசமான நஷ்ட ஈடு வழங்கப்படும்.

என இலங்கை உப்பு நிறுவன தலைவர் அகஸ்டீன் டயஸ் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார் சீரற்ற காலநிலையில் ஆனையிறவு உப்பளத்தில் வேலை தடைப்பட்டமையினால் வருடம் ஒன்றுக்கு சுமார் 2 கோடியே 50 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்

# அகதிகள் புனர்வாழ்வுக்கு ஐந்தரைக் கோடி ஒதுக்கீடு

இந்தியாவிலிருந்து திரும்பும்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து திரும்பி வரும் அகதிகளுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம ஐந்து கோடி நாற்பத்தியிரண்டு லட்சம் ரூபாவினைஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதில் 4 கோடி 67 லட்சம் ரூபா புனர் வாழ்வு புனர் நிர்மாண அமைச்சு மூலமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா, சுவீடன், சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இதற்கான நிதியை பெற்றுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் அகதிகளை குடியமர்த்த உதவும் என்றும் கூறப்படுகிறது.

# அநுரா, திலக்கருணாரத்னா புதுடில்லி பயணமாவர்

அகில இந்திய முகாமைத்துவ சம்மேளனத்தின் புலமைப் பரிசில்களை ஏற்று இந்தியா செல்லும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஹெல உறுமய குழுவின் இணைச் செயலாளருமான திலக் கருணாரத்னா நவம்பர் மூன்றாம் திகதியன்று பிரத

செல்லும் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க புதுடில்லியில் பிரதமரை மட்டுமன்றி ஆளும் காங்கிரஸ் கட்சியின் பிரமுக்கியஸ்தர்கள் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்வானி வி. பி சிங்

# ஒன்பது வடபகுதி இளைஞர் பொலிசாரால் கைது

(நிட்டம்புவ)

வடக்கில் இருந்து தென் இலங்கை சென்ற 9 இளைஞர்கள் நிட்டம்புவ பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் பப்படம் தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் பெயர் வி... எஸ். பாஸ்கரன், ஏ. அற்... ராஜா, எஸ் மகாசீலன் ... விஜேரத்னம், டி. துரைராஜ... ஜீ. குணநாதன், எல் செ... ராஜ ஏனைய இருவரின் பெயர் அறிய முடியவில்லை.

# 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு: 13 — 08 — 1967

வீரச்சாவு: 17 — 9 — 1992

## வீரவேங்கை மகேஸ்வரி

[முத்துக்குமார் ரஜனி]

எரிகின்ற தாயகத்திலே பசுந்தளிராய் உதித்தவளே
எரிமலையாய் நீயெழுந்தாய் எரிகணைக மத்தியிலே
இடைநடுவில் நீ விழுந்தாய் நோயின் பிடியினிலே
இதயக் கோயிலிலே குடிகொண்ட இளந்தளிரே
உமக்கு எங்கள் அஞ்சலிகள்.

ராணுவம்

கள்'' எனக்கூறி அனுப்பினோம் எமது அனுமதியுடன் அவர்கள் வவுனியா இராணுவத்தினரிடம் நாசகாரச் செயலில் ஈடுபடுவதாகச் சம்மதித்தனர்.

## ஜோசப் முகாமில் பயிற்சி:

இவர்கள் இருவருக்கும் வவுனியாவில் உள்ள ஜோசப்முகாமில் ஒருநாள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது அங்கு வெடிபொருள்களின் பாவனைபற்றியும், அவை எவ்வாறு எங்கே புதைக்கப்படல்வேண்டும் என்பது பற்றியும் பூரண பயிற்சி இராணுவத்தினரால் வழங்கப்பட்டது

சமுக

கும் சமமான நன்மைகளை வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

வேற்றுமை இயற்கையாக அமையப் பெற்ற ஒரு பெறுமானம் என்பதை நாம் ஏற்றாக வேண்டும் கருத்து வித்தியாசமும், அபிப்பிராயபேதமும்ஜனநாயகத்தின் முன்னேற்றததுக்கான அறிகுறிகள். கல்வியின் நோக்கம் உண்மையை நோக்கியதாக இருக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது

# நல்லின ஆடுகள் விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மேஜர் அப்துல்லா குடியேற்றத் திட்டத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு நல்லின ஆடுகள் இலவசமாக வழங்கப்பட்டன. தென்மராட்சி இராணுவப் பொறுப்பாளர் திரு. பரணி இவற்றை வழங்கினார். (35)

# மரண அறிவித்தல்

வீரப்பிறப்பு: 13 — 08 — 1967



வீரச்சாவு: 17 — 9 — 1992

## வீரவேங்கை மகேஸ்வரி

[முத்துக்குமார் ரஜனி]

எரிகின்ற தாயகத்திலே பசுந்தளிராய் உதித்தவளே
எரிமலையாய் நீயெழுந்தாய் எரிகணைக மத்தியிலே
இடை நடுவில் நீ விழுந்தாய் நோயின் பிடியினிலே
இதயக் கோயிலிலே குடிகொண்ட இளந்தளிரே
உமக்கு எங்கள் அஞ்சலிகள்.

முள்ளி வீதி,
அரியாலை.
[3558]

உங்கள் பிரிவால் வாடும்,
தகப்பன், சகோதர சகோதரிகள்.
உறவினர், நண்பர்கள்.

4-ம் ஆண்டு 3 ம் ஆண்டு

## நினைவலைகள் !





மட்டு - அம்பாறை பிராந்திய
அரசியற் பொறுப்பாளர்

**கப்டன் பிரான்சிஸ்**
(இராசையா
சடாட்சரபவான்)

**2-ம்லெப். பவான்**
(இராசையா
சரவணபவான்)

31.10.1988 <வீரச்சாவு> 13.09.1989

கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு

காலநெருப்புக்குள் இவர்
கருகுண்டு போவாரா ?
எப்படி முடியும் ?
கால நெருப்பும் இவர்
கைகளுக்குள்ளே தானே
கட்டுப்பட்டிருந்தது.

நாளைய உலகின்
விடியற் பொழுதில் . . . .
இவர்களின் பெயர்களும்
உச்சரிக்கப்படும்

(சி-5332)

நண்பர்கள், உறவினர்கள்

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

வரும் அகதிகளுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம ஐந்து கோடி நாற்பத்தியிரண்டு லட்சம் ரூபாவினைஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதில் 4 கோடி 67 லட்சம் ரூபா புனர் வாழ்வு புனர் நிர்மாண அமைச்சு மூலமாக வழங்கப்படும் என்றும் தெரி பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா, சுவீடன், சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இதற்கான நிதியை பெற்றுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் அகதிகளை குடியமர்த்த உதவும் என்றும் கூறப்படுகிறது.

## அநுரா, திலக்கருணாரத்னா புதுடில்லி பயணமாவர்

அகில இந்திய முகாமைத்துவ சம்மேளனத்தின் புலமைப் பரிசில்களை ஏற்று இந்தியா செல்லும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஹெல உறுமய குழுவின் இணைச் செயலாளருமான திலக் கருணாரத்னா நவம்பர் மூன்றாம் திகதியன்று பிரதமர் நரசிம்மராவைப் புதுடில்லியில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை புதுடில்லி செல்லும் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க புதுடில்லியில் பிரதமரை மட்டுமன்றி ஆளும் காங்கிரஸ் கட்சியின் பிறமுக்கியஸ்தர்கள் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்வானி வி. பி சிங் போன்றோரையும் திருமதி சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசவுள்ளார்

## நிர்வாக சேவைக்கு மேலும் ஆட்சேர்ப்பு

இலங்கை நிர்வாக சேவைக்கு மேலும் ஒரு தொகுதியினர் சேர்க்கப்படவுள்ளனர். இவர்கள் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் மூலமாக தெரிவு செய்யப்படுவர். அரசாங்க சேவையில் சம்பந்தப்பட்ட தரங்களில் பத்து வருடசேவையைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். 22-30 வயதிற்கு இடைப்பட்ட பட்டதாரிகள் திறந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 13ஆம் திகதி என்றும் பரீட்சைகள் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என்றும் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

### படையினரில்

நோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு என்பதை அவர்கள் நன்கு அறிந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### யாழ். குடா

ஆய்வுச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பில் ஆய்வாளர் சிலர் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

சிங்கப்பூரில் மாத்திரம் இப்படம் விற்பனைக்கு உண்டு இதன் விலை 5,000 அமெரிக்க டாலர்கள் படத்தின் ஒரு பிரதி ஹைதராபாத்தில்உள்ள தேசிய தொலை நுணர்வு மையத்தில் உள்ளது ஆய்வாளர் தவிர ஏனையோர் இதனைப் பார்வையிட அனுமதிக்கப்பட மாட்டார்கள்

### இராணுவம் நகர்ந்த

விக் கொண்டதனால் பலர் வீதியில் தடம் புரண்டு விழுந்து எழும்பினர் மேற்படி பகுதிகளில் காணப்பட்ட கடைகள் மின்னல் வேகத்தில் பூட்டப்பட்டன சிலர் மாட்டுவண்டிகளில்சில பொருள்களை ஏற்றிக் கொண்டு சவாரி செய்தனர்

இவற்றுக் கெல்லாம் காரணம் அளவெட்டியில் உள்ள ''அளுவத்தை'' என்ற பகுதிக்கூடாக ஆமி நுளைந்து விட்டது என்ற செய்தியே அது செய்தியல்ல வெறும் 'வதந்தி' என்று கண்டறிவதற்கு அரை மணி நேரம் எடுத்தது இதன் பின்னர் அனைவரும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

### மட்டு

விக்கப்பட்டுள்ளது.

இவரின் இடத்திற்கு தியத்தலாவை இராணுவ முகாமில் கடமையாற்றிய லோஹான் குணரத்னா நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

### மீட்புநிதி

காமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும்பச்சிலைப் பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான மீட்புநிதிசேகரிப்பு பி.ப. 2.00 மணி தொடக்கம் 4 00 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்-

ளவர்போவதற்கு இடமில்லை என்றும்,

தொண்டமானைக் கண்டிப்

### ராணுவம்

கள்'' எனக்கூறி அனுப்பினோம் எமது அனுமதியுடன் அவர்கள் வவுனியா இராணுவத்தினரிடம் நாசகாரச் செயலில் ஈடுபடுவதாகச் சம்மதித்தனர்.

### ஜோசப் முகாமில் பயிற்சி:

இவர்கள் இருவருக்கும் வவுனியாவில் உள்ள ஜோசப்முகாமில் ஒருநாள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது அங்கு வெடிபொருள்களின் பாவனைபற்றியும், அவை எவ்வாறு எங்கே புதைக்கப்படல்வேண்டும் என்பது பற்றியும் பூரண பயிற்சி இராணுவத்தினரால் வழங்கப்பட்டது

### பாதுகாப்பான பொதி அமைப்பு:

அதி உயர் சக்தி வாய்ந்த வெடிபொருள்கள் விடுதலைப் புலிகளின் சோதனைகளுக்கு அகப்படாத வகையில் மிகவும் நுட்பமான முறையில் பொதி செய்யப்பட்டு கடந்த 21 ஆம் திகதி இவர்கள்மூலம் அனுப்பி வைக்கப்பட்டது

### புலிகளிடம் ஒப்படைப்பு:

இராணுவத்தினரால் கொடுத்து அனுப்பப்பட்ட பொதிகளை விடுதலைப் புலிகளிடம் அவ்விரு வியாபாரிகளும் தாமாகவே கொண்டுவந்து ஒப்படைத்தனர் இவற்றை மிகவும் அவதானமாகப் பிரித்துப் பார்த்தபோது அவை மிகவும் நுட்பமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதில்அமுக்கக்கண்ணி வெடியும், ஐந்து கிலோ நிறையுடைய அதி உயர்சக்திவாய்ந்த வெடிமருந்து (C-4) இரண்டு பொலிதீன் பைகளில் அடைத்து மா நிரப்பிய உரப் பையுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்தது கிறீம்கிறாக்கர் பிஸ்கற்றினை நடுவால் குடைந்து அதற்குள் மிகவும் சாதுரியமான முறையில் ஊக்கியும், மின்சார கெற்பும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

### பெருமளவில் பலி:

மேற்படி சிறிலங்கா இராணுவத்தினரின் திட்டம் வெற்றியளித்திருக்கும்பட்சத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பர். வாகனத்துக்கு வைக்கக்கூடிய விதத்திலேயே இக்கண்ணி வெடி தயாரிக்கப்பட்டிருந்தது.

கொம்படிப் பகுதியிலும் இதேபோன்ற நாசகார வேலையே இடம்பெற்றது. ஆனால் இங்கு உயிர்ச்சேதம் மிக அதிக அளவில் இருந்திருக்கும் (ச)

வடக்கில் இருந்து தென் இலங்கை சென்ற 9 இளைஞர்கள் நிட்டம்புவ பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் பப்படம் தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் வைத்து செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் பெயர் வி... எஸ். பாஸ்கரன், ஏ. அற்... ராஜா, எஸ் மகாசிலன்... விஜேரத்னம், டி. துரைரா... ஜீ. குணநாதன், எல் செ... ராஜ ஏனைய இருவரின் பெயர் அறிய முடியவில்லை

### சமுக

கும் சமமான நன்மைகளை வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

வேற்றுமை இயற்கையாக அமையப் பெற்ற ஒருபெறுமானம் என்பதை நாம் ஏற்றாக வேண்டும் கருத்து வித்தியாசமும், அபிப்பிராயபேதமும்ஜனநாயகத்தின் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள். கல்வியின் நோக்கம் உண்மையை நோக்கியதாக இருக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது

## நல்லின ஆடுகள் விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மேஜர் அப்துல்லா குடியேற்றத் திட்டத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு நல்லின ஆடுகள் இலவசமாக வழங்கப்பட்டன. தென்மராட்சி இராணுவப் பொறுப்பாளர் திரு. பரணி இவற்றை வழங்கினார். (35)

## மரண அறிவித்தல்

## குருநாதர் வல்லிபுரம்

(இ. போ. ச. சாரதி, கிளிநொச்சி)

திரு. குருநாதர் வல்லிபுரம் (மட்டுவில்) காலமானார். இவர் குருநாதர் பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும், திருமதி தங்கம்மா வல்லிபுரத்தின் அன்புக் கணவரும், திருமதி இராசம்மா சிவராஜா, திரு. கந்தசாமி (இ.போ.ச. சாரதி). திரு. நடராசா, திரு சிவலிங்கம் (ஆசிரியர்). திருமதி மங்கையர்க்கரசி நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி சிவமலர் மகேந்திரன், திரு. சிவபாலன் (ஜேர்மனி), திரு சிறிகாந்தன், ரகு, சுதாகர், சுதர்சன் ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. சிபா. மகேந்திரன் (புகைபிரதப்பாதைவேலைப்பரிசோதகர், வவுனியா). திருமதி வசந்தி சிவபாலன்(ஜேர்மனி). திருமதி மாலதி சிறிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் கோபிநாத். கோகுல்நாத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் (29-10-92) வியாழக்கிழமை துர்க்கா வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சிபா. மகேந்திரன்
(மருமகன்)

மீசாலை.

(3557)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 30. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6377

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-
28-3306, 42-3339, 41-6177, 28-8367, 26-3118, 24-336, 26-3046, 42-2355, 26-4568, 41-5979, 24-9856, 24-5041, 26-6075, 24-5437, 26-6933.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
43-1857, 41-9663, 24-4107, 42-1046, 26-375, 28-3735, 42-7975, 22-6892, 40-1714, 24-4560, 26-2827, 26-2585, 42-2295, 27-9416.